ஸ்டாலினுக்கு உடல்நலக் குறைவு: திமுக முப்பெரும் விழா ஒத்திவைப்பு

சென்னை, செப். 15: திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளதால், செவ்வாய்க்கிழமை மாலை நடைபெறவிருந்த அக்கட்சியின் முப்பெரும் விழா ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து திமுக பொதுச் செயலர் துரைமுருகன் வெளியிட்ட அறிக்கை: சென்னையில் உள்ள திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் முப்பெரும் விழா செவ்வாய்க்கிழமை மாலை (செப். 15) நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு திடீர் காய்ச்சல் பாதிப்பு காரணமாக முப்பெரும் விழா ஒத்திவைக்கப்படுகிறது. முப்பெரும் விழா நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

திமுக தொடங்கப்பட்ட நாள், திமுக நிறுவனர் அண்ணா பிறந்த நாள், பெரியார் பிறந்த நாள் விழா ஆகியவற்றை முப்பெரும் விழாவாக ஆண்டுதோறும் திமுக கொண்டாடுகிறது. இதன் தொடர்ச்சியாக, ஆண்டுதோறும் திமுக சார்பில் பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது, பாவேந்தர் விருது, பேராசிரியர் விருது, மு.க.ஸ்டாலின் விருது வழங்கப்பட்டு வருகிறது.

திமுக சார்பில் பெரியார் பிறந்த நாள் சமூகநீதி நாளாக கடைப்பிடிப்பு

சென்னை, செப். 15: பெரியார் ஈவெரா பிறந்த நாளை சமூகநீதி நாளாகக் கடைப்பிடிக்க வேண்டுமென அக்கட்சியினருக்கு திமுக சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து திமுக தலைமை வெளியிட்ட அறிக்கை:

பெரியாரின் ஒவ்வொரு பிறந்த நாளும் சமூகநீதி நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. அவரது பிறந்த நாளை சமூகநீதி நாளாக உறுதிமொழி ஏற்க வேண்டும் என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் 2021-இல் சட்டப்பேரவையில் அறிவித்தார். அதன்படி, பெரியார் பிறந்த நாளான வியாழக்கிழமை (செப்.17) காலை 10.30 மணி அளவில், அந்தந்த மாவட்ட அலுவலகத்தில் சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடத்தப்பட வேண்டும்.

வியாழக்கிழமை காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள அறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கருணாநிதி சிலை முன் சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மு.க.ஸ்டாலினுக்கு எதிரான அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வழக்கு: விசாரணை ஒத்திவைப்பு

சென்னை,செப்.15: ரூ.1 கோடி நஷ்டஈடு கோரி அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தாக்கல் செய்த மனுவுக்கு முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் தரப்பில் பதிலளிக்க செப்.21-ஆம் தேதி வரை கால அவகாசம் வழங்கி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் 'எக்ஸ்' தளத்தில், அமலாக்கத்துறை வெளியிட்ட அறிக்கையை சுட்டிக்காட்டி, ரூ.258 கோடி போதைப்பொருள் கடத்தல் வழக்கில் மூளையாக செயல்பட்ட ஜான் பிரிட்டோ, பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ்அர்ஜுனாவின் உறவினர் என்ற உண்மை அம்பலமாகியுள்ளதாக பதிவிட்டிருந்தார்.

அமலாக்கத்துறை குறிப்பிட்டிருந்த ஜான் பிரிட்டோ தனது உறவினர் இல்லை எனக்கூறி, ரூ. 1 கோடி மான நஷ்டஈடு கோரி மு.க.ஸ்டாலினுக்கு எதிராக அமைச்சர் ஆதவ் அர்ஜுனா சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் வெளியிடப்பட்ட பதிவுகளை நீக்க மு.க.ஸ்டாலின் மற்றும் திமுக தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரியிருந்தார். இந்த மனுவுக்கு பதிலளிக்க மு.க.ஸ்டாலின் மற்றும் திமுக தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி கோவிந்தராஜன் திலகவதி முன் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் பி.வில்சன், பதில்மனு தாக்கல் செய்ய செப்.21 வரை அவகாசம் வழங்கக் கோரினார். இதை ஏற்றுக்கொண்ட நீதிபதி, அவகாசம் வழங்கி விசாரணையை செப்.21-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

உவேசா நூலகம் தமிழின் வரலாற்றுப் பெட்டகம்

நிர்மலா சீதாராமன் புகழாரம்

சென்னை பெசன்ட் நகரில் உள்ள டாக்டர் உவேசா நூலகத்தில் உள்ள அரிய ஓலைச் சுவடிகளை செவ்வாய்க்கிழமை பார்வையிட்ட மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன். உடன் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், எழுத்தாளர் மாலன், விஜடி வேந்தரும் நூலகத்தின் தலைவருமான கோ.விசுவநாதன், துணைத் தலைவர் சிவாலயம் ஜெ.மோகன் உள்ளிட்டோர்.

சென்னை, செப். 15: உவேசா நூலகம் தமிழ் மொழியின் அரிய ஓலைச் சுவடிகள், பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாக்கும் அறிவுப் பெட்டகமாக விளங்குகிறது என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் புகழாரம் சூட்டினார்.

சென்னை பெசன்ட் நகரில் உள்ள டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலகத்துக்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் செவ்வாய்க்கிழமை வருகை தந்தார். இதையடுத்து, அங்கு வைக்கப்பட்டிருந்த உவேசா பதிப்பித்த நூல்கள், ஓலைச்சுவடிகள், உவேசா கடிதங்கள், கையெழுத்துப் பிரதிகள், நாட்குறிப்புகள், உவேசா சேகரித்த ஆவணங்களை ஆர்வத்துடன் பார்வையிட்டார். தொடர்ந்து, அந்த நூலகத்தில் தற்போது பதிப்பிக்கப்பட்டு வரும் பழந்தமிழ் நூல்கள் குறித்து நூலக நிர்வாகிகளிடம் கேட்டறிந்தார். பின்னர், உவேசா நூலக நிர்வாகிகளுடன் அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்துரையாடியார்.

அப்போது, சங்ககால இலக்கியங்கள், அரிய ஓலைச் சுவடிகள் பலவற்றைப் பாதுகாக்கும் வரலாற்றுப் பெட்டகமாக உவேசா நூலகம் விளங்குகிறது. அறியப்படாத பல தமிழ் நூல்களை மீட்பதற்காக உவேசா ஆற்றிய பணிகள் அளப்பரியவை. சிலப்பதிகாரத்தில் வரும் சதுக்க பூதம் உள்பட தமிழ் இலக்கியங்களில் உள்ள பல அரிய தகவல்கள் வெளிப்பட காரணமாக இருந்தவர் அவர். உவேசா படைப்புகள், திரட்டிய ஆவணங்கள், பதிப்பித்த நூல்கள் தொடர்பான தகவல்களை இளைய தலைமுறையினரிடம் கொண்டு செல்ல வேண்டும்.

உவேசாவின் உதயணன் சரித்திரச் சுருக்கம், உதயணன் குமார காவியம், சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் ஆகிய படைப்புகளைத் தேடிக் கொண்டிருந்தேன். அந்த நூல்கள் தற்போது இங்கு கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் நூலில், சங்க கால நூல்களில் கூறப்படும் தெய்வங்கள், புலமை வாய்ந்த பெண்பாற் புலவர்கள் எனப் பல அரிய தகவல்கள் உள்ளன. அந்த நூலில் உள்ள ஒவ்வொரு தகவலும் வியப்பூட்டுகிறது என்றார் அவர்.

இந்த நிகழ்வின்போது, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், தமிழக பாஜக மாநில பிரிவு அமைப்பாளர் கே.டி.ராகவன், உவேசா நூலகத்தின் தலைவரும் விஜடி வேந்தருமான கோ.விசுவநாதன், செயலர் டி.சத்தியமூர்த்தி, துணைத் தலைவர் சிவாலயம் ஜெ. மோகன், காப்பாட்சியர் பெ.சுயம்பு, எழுத்தாளர் மாலன், வழக்குரைஞர் கே.எஸ். ராதாகிருஷ்ணன், புலவர் கோ.உத்திராடம், நூலக அலுவலகப் பொறுப்பாளர் வி.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

முதல்வர் குறித்து அவதூறு பேச்சு: ஆ.ராசா, சேகர்பாபு மீது வழக்குப் பதிவு

சென்னை, செப். 15: தமிழக முதல்வர் ச.ஜோசப் விஜய் குறித்து அவதூறாகப் பேசியதாக ஆ.ராசா எம்.பி., முன்னாள் அமைச்சரும் எம்எல்ஏவுமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் மீது சென்னை போலீஸார் திங்கள்கிழமை வழக்குப் பதிவு செய்தனர்.

அண்மையில் நடந்து முடிந்த சட்டப்பேரவை கூட்டத் தொடரின் காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது முதல்வர் விஜய் பதில் அளித்துப் பேசியபோது, திமுக குறித்தும், மறைந்த அந்தக் கட்சித் தலைவர்கள் குறித்தும் குறித்தும் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். குறிப்பாக சர்க்காரியா கமிஷன் அறிக்கை, வீராணம் திட்டம், அமலாக்கத் துறை ஆவணங்கள் ஆகியவை குறித்துப் பேசினார்.

திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்களை அவமதிக்கும் வகையில் பேசியதாக முதல்வர் விஜய்யை கண்டித்து திமுக சார்பில் தமிழகம் முழுவதும் கடந்த சனிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சைதாப்பேட்டையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் திமுக எம்.பி.யும், முன்னாள் மத்திய அமைச்சருமான ஆ.ராசா பங்கேற்றுப் பேசினார். அப்போது அவர் முதல்வர் விஜய் குறித்து அவதூறாக, சர்ச்சைக்குரிய வகையில் விமர்சித்ததாக தவெக நிர்வாகி கார்த்திக், சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

அந்தப் புகாரின் அடிப்படையில், வன்முறையைத் தூண்டும் வகையில் பேசுதல், பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தல் உள்பட ஏழு பிரிவுகளின் கீழ் ஆ.ராசா மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பி.கே. சேகர்பாபு பங்கேற்றுப் பேசினார். அப்போது அவர் முதல்வர் விஜய்யை ஒருமையில் பேசி, கடுமையாக விமர்சித்ததாக சமூக நலத் துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி, சென்னை வடக்கு கடற்கரை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அந்தப் புகாரின் அடிப்படையில் 6 பிரிவுகளின் கீழ் சேகர்பாபு மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

ஏற்கெனவே, காவல் துறையின் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தியதாக இரு இடங்களிலும் திமுகவினர் மீது இரு பிரிவுகளின் கீழ் தனித்தனியாக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

நேபாளத்தில் காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் தலைமைச் செயலகம் முன் போராட்டம்

சென்னை,செப்.15: நேபாள பெருவெள்ளத்தில் சிக்கி காணாமல்போனவர்களின் குடும்பத்தினர் தலைமைச் செயலகம் முன் செவ்வாய்க்கிழமை போராட்டம் நடத்தினர்.

நேபாளத்தில் கடந்த ஆக. 26-ஆம் தேதி ஏற்பட்ட நிலச்சரிவு, பனிப்பாறை சரிவால் பெரும் வெள்ளத்தில் தமிழகத்திலிருந்து கைலாஷ் யாத்திரை சென்றவர்களும் சிக்கினர். 20 நாள்களாகியும், தமிழகத்தில் இருந்து சென்றவர்களில் 85 பேர் குறித்து தகவல் கிடைக்கவில்லை. குறிப்பாக, சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்த மகாதேவ் கைலாஷ் யாத்திரை ஏஜென்சி மூலம் சென்ற 49 பேரை பற்றிய தகவல் தெரியவில்லை.

தலைமைச் செயலகம் முன் போராட்டம்: இந்நிலையில் குரோம்பேட்டையைச் சேர்ந்த மகாதேவ் கைலாஷ் யாத்திரை ஏஜென்சி மூலம் சென்ற 49 பேரின் குடும்பத்தினர், தலைமைச் செயலகம் முன் செவ்வாய்க்கிழமை திரண்டனர்.

அவர்கள், அங்கு 49 பேரையும் மீட்டுத் தரக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள், கோரிக்கையை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

அவர்களை அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸார் சமாதானப்படுத்தினர். பின்னர் அவர்களை அயலக தமிழர் நலத் துறை அமைச்சர் தென்னரசை சந்தித்துப் பேசினார். அப்போது அவர், காணாமல் போனவர்களை மீட்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

20 நாள்களாகியும் தகவல் இல்லை: இதன் பின்னர் காணாமல் போனவர்களின் உறவினர்கள் கூறுகையில், '20 நாள்களாகியும் எங்களுக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. மரபணு பரிசோதனை எடுத்த பிறகும் அரசு எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை. எனவே, காணாமல் போனவர்களை மீட்க நேபாளத்தில் மட்டுமன்றி சீனாவிலும் தேடுதல் பணியை மேற்கொள்ள வேண்டும்' என்றனர்.

அமமுக, புதிய தமிழகம் கட்சிகளிடம் ஆதரவு கோரியது அதிமுக

சென்னை, செப்.15: மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளின் இடைத் தேர்தலில் அதிமுக வேட்பாளர்களுக்கு ஆதரவு அளிக்கக் கோரி அக்கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் அமமுக, புதிய தமிழகம் ஆகிய கட்சிகளின் தலைவர்களை செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசினர்.

அதிமுக சார்பில் மதுராந்தகம் தொகுதிக்கு கனிதாசம்பத், தாராபுரம் தொகுதிக்கு கே.பானுமதி வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஆதரவு கோரி அதிமுக தரப்பில் முன்னாள் அமைச்சர்கள் குழுவினர் பாஜக, இந்திய ஜனநாயக கட்சி, புதிய நீதிக்கட்சி மற்றும் பாமக ஆகிய கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு கோரினர். அதையடுத்து செவ்வாய்கிழமை அதிமுக சார்பில் துணைப் பொதுச் செயலர் கே.பி.முனுசாமி, முன்னாள் அமைச்சர் ஓ.எஸ்.மணியன் மற்றும் நிர்வாகிகள் அக்ரி கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் புதிய தமிழகம் கட்சித் தலைவர் கே.கிருஷ்ணசாமியை சந்தித்து இடைத் தேர்தலில் அதிமுக வேட்பாளர்களை ஆதரிக்கக் கோரினர்.

அவரைத் தொடர்ந்து, அமமுக பொதுச் செயலர் டி.டி.வி.தினகரனையும் அவர்கள் சந்தித்து அதிமுக வேட்பாளர்களை ஆதரிக்கவும், பிரசாரம் மேற்கொள்ளவும் கோரினர். அப்போது அமமுக துணைப் பொதுச் செயலர் ஜி. செந்தமிழன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

மதுராந்தகம் இடைத் தேர்தலில் அதிமுக சார்பில் முன்னாள் எம்.எல்.ஏ.வான கனிதாசம்பத்தும், தாராபுரம் தொகுதிக்கு கே.பானுமதியும் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

RESEARCH DESIGNS & STANDARDS ORGANISATION, LUCKNOW

E-Tender Notice No.: 03265014/182

Executive Director/Stores on behalf of President of India invites E-Open Tender (Single Packet) by this office as follows-

SN	Tender No.	Brief Description	QTY.	Tender Closing Date / Opening of Tender
1	2	3	4	5
1	03265014	Supply, Installation, Testing and Commissioning of COMPUTER CONTROLLED DIRECT READING OPTICAL EMISSION SPECTROMETER FOR ANALYSES OF FERROUS (FE) AND NON-FERROUS (AL & CU BASE) METALS AND ALLOYS as per attached technical specification	01 Set	05/10/2026 (Monday)

For complete details of tender conditions and Corrigendum issued in tender, if any. please visit IREPS website **www.ireps.gov.in**

Executive Director/Stores/RDSO/Lucknow

IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்

IDFC FIRST Bank

(முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட் IDFC பேங்க் லிமிடெட்-நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது)
CIN: L65110TN2014PLC097792
பதிவு அலுவலகம்: KRM டவர்ஸ், 8-வது தளம், ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை - 600031.
தொ.பே: +91 44 4564 4000 | தொலைநகல்: +91 44 4564 4022.

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம்-2002, பிரிவு 13(2)-ன் கீழ் அறிவிப்பு.

கீழ்க்காணும் கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக்கடன்தாரர்கள், எமது **IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்-க்கு (முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட் IDFC பேங்க் லிமிடெட்-நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது)** கீழ்க் காணும் ஈட்டுறுதி செய்யப்பட்ட கடன் வசதிகளைப் பெற்றுள்ளனர். கீழ்க்காணும் கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக்கடன்தாரர்கள் பெற்றுள்ள கடன்களுக்கு ஈடாக தத்தமது சொத்துக்களை வங்கியிடம் அடமானம் வைத்துள்ளனர். அவர்கள் அவரவர்களது கடன் ஒப்பந்தங்களின்படியான விதிமுறை நிபந்தனைகளைப் பின்பற்றத் தவறிவிட்டதால் அந்தக் கடன் கணக்குகள் ஒழுங்கற்றதாக விட்டன. அதனால், அவை, RBI வழிகாட்டுதல்படி NPA (வாராக் கடன்கள்) என வகைப்படுத்தப் பட்டுள்ளன. அவர்களுக்கான அனுப்பப்பட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி அவர்கள் **IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்-க்கு (முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட் IDFC பேங்க் லிமிடெட்-நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது)** செலுத்த வேண்டிய கடன் பாக்கிகள் பின்வரும் அட்டவணையில் மேலும் குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ளதோடு, அத்தொகைகள் மீதான மேல் வட்டியும் உண்டு. அந்த வட்டியானது அந்தந்த தேதியிலிருந்து ஒப்பந்த விகிதத்தில் விதிக்கப்படும்.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	கடன் வகை	கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக்கடன்தாரர்கள் பெயர்	பிரிவு 13(2) அறிவிப்பு நாள்	பிரிவு 13(2) அறிவிப்பின்படி கடன் பாக்கித் தொகை
1	28542007	சொத்து மீதான கடன்	1. ராஜா P 2. ரமணா பிசினஸ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் 3. சரசா R	26.08.2026	இந்திய ரூபாய். 36,62,326.05/-

சொத்து முகவரி: அனைத்து இன்றியமையாப் பகுதிகளும் பாகங்களும் கூடிய நிலம் மற்றும் கட்டடம் அமைவிடம்: கிராமநத்த சர்வே எண் 308, புதிய பட்டாவின்படி புதிய நகர சர்வே . எண் 24/2, பிளாக் எண் 52, பரப்பளவு 1902 சதுர அடி அமைவிடம்- பள்ளிக்கூடம் 3வது குறுக்குத் தெரு, தண்டுரை கிராமம், ஆவடி வட்டம், திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு-600072 **இதன் எல்லைகள்: கிழக்கு:** பள்ளிக்கூடம் 3வது குறுக்குத் தெரு, **மேற்கு:** தங்கதுரைக்குச் சொந்தமான காலி நிலம், **வடக்கு:** நாகம்மா கோயில் தெரு, **தெற்கு:** துரைராஜுக்குச் சொந்தமான மீதமுள்ள பகுதி. **அளவீடுகள்: கிழமேல் வடக்குப் பக்கம்:** 38 அடி, **கிழமேல் தெற்குப் பக்கம்:** 35 ½ அடி, **தென்வடல் கிழக்குப் பக்கம்** : 52 ½ அடி, **தென் வடல் மேற்குப் பக்கம்:** 51 அடி. ஆவடி சார் பதிவு மாவட்டத்திலும், தென் சென்னை பதிவு மாவட்டத்திலும் அமைந்துள்ளது.

ஆகையால், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 நாள்களுக்குள் நீங்கள் மேலே அட்டவணையில் காணும் விவரங்கள்படி கடன் பாக்கி தொகையுடன் அவரவர்களுக்கான மேற்படி தேதியிலிருந்து ஒப்பந்த வீதத்திலான வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்கள் போன்றவை சேர்த்து முழுத்தொகையும் **IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் (முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட் IDFC பேங்க் லிமிடெட்-நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது)** வசம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். தவறினால், **IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்-க்கு (முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட் IDFC பேங்க் லிமிடெட்-நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது).** செலுத்தப்படவேண்டிய கடன் பாக்கியை வசூலிப்பதற்காக, கீழே கையொப்பமிட்டவர் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட அடமானச் சொத்துக்கள் மீது சர்ஃபாசி சட்டம் பிரிவு 13(4) மற்றும் பிரிவு 14-ன் கீழ் நடவடிக்கை எடுக்கும் அவசியம் ஏற்படும். மேலும் மேற்குறிப்பிட்ட சட்டம் பிரிவு 13(13)-ன் கீழ், மேற்குறிப்பிட்ட கடனீட்டு சொத்துக்களை எமது அனுமதியில்லாமல் விற்பனை/குத்தகை அல்லது வேறு இதர முறைகள் மூலம் உரிமைமாற்றம் செய்வதற்கு தாங்கள் தடை விதிக்கப்படுகிறீர்கள் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்,
IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்
(முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட் IDFC பேங்க் லிமிடெட்-நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் என அறியப்படுகிறது)

நாள்: 16.09.2026
இடம்: சென்னை, தமிழ்நாடு

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்

CUB

கடன் மீட்பு மற்றும் மேலாண்மை துறை
நிர்வாக அலுவலகம் : எண். 243, காந்தி நகர், கும்பகோணம் - 612 001.
மின்னஞ்சல்: crmd@cityunionbank.in, போன்: 0435-2432322, ஃபேக்ஸ் : 0435-2431746

தங்க நகைகள் ஏல அறிவிப்பு

எங்கள் வங்கியின் கிளை அலுவலகத்தில், தங்க நகைகளின் பேரில் கடன் பெற்றுள்ள கீழ்கண்ட நபர்களுக்கு, நகைக்கடன் கெடு முடிந்து நெடுநாட்கள் ஆகியும் கடன் பாக்கி முழுவதும் செலுத்தி நகைகளை திரும்பப்பெற நோட்டீஸ் அனுப்பியும், கடன் கணக்கை முடித்து நகைகளை மீட்காதபடியால் உடனடியாக அசல் வட்டி மற்றும் இதர செலவுகள் உட்பட கடன் முழுவதும் செலுத்தி நகைகளை திரும்பப்பெற வேண்டுமென கோரப்படுகிறது. அப்படி தவறினால், கடனுக்கு ஈடாக வைக்கப்பட்டுள்ள நகைகள், கடன் பெற்றவர்களின் செலவிலேயே வருகிற **28.09.2026 (திங்கட்கிழமை) பிற்பகல் 1.00 மணிக்கு** வங்கி கிளை அலுவலகத்தில் கிளை மேலாளர் அவர்களால் பகிரங்க ஏலம் விடப்படும் எனவும் அல்லது மறு ஏல அறிவிப்பின்றி வங்கி நிர்வாகத்தின் சௌகர்யப்படி வேறு ஏதாவது தேதியில் ஏலம் விடப்படும் எனவும் இதன் வாயிலாக அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கீழ்கண்ட கடன் பெற்றவர்களில் யாராவது இறந்திருந்தால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வங்கி நோட்டீஸ் கிடைக்கப்பெறாதவர்களுக்கும் பொருந்தும். ஏலத்தில் பெற்ற தொகையில் மேற்படி நகை கடனுக்கு உரிய தொகை போக மீதி இருந்தால் அக்கடன்தாரர் வங்கிக்கு செலுத்த வேண்டிய பிற கடன்களுக்கோ ஜாமீன்தாரராக உள்ள கடன்களுக்கோ வரவு வைக்கப்படும் ஏலத்தில் பெற்ற தொகை கடன் தொகையை விட குறைவாக இருந்தால் மீதித்தொகை சட்ட நடவடிக்கை மூலம் வசூலிக்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது கடன் பெற்ற நபர்கள் தங்கள் கடன் கணக்கில் ஏதேனும் பகுதி பணம் செலுத்தியிருந்தாலும் ஏல தேதிக்குள் கடன் வட்டி இதர செலவுகள் முழுவதும் கட்டி நகைகளை மீட்காவிடில் அந்த நகைகளும் ஏலம் விடப்படும் என அறிவிக்கின்றோம்

இந்த நடவடிக்கைகளை மாற்றவோ ஒத்திப்போடவோ நிறுத்திவைக்கவோ குறிப்பிட்ட நகைகளை ஏலத்திலிருந்து நீக்கி வைக்கவோ வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு என்பதனை அறியவும்.

ஏலம் நடைபெறும் தேதியில் நிலவும் சந்தை மதிப்பின் படி ஒரு கிராமுக்கான விலை நிர்ணயிக்கப்படும்.

வ. எண்	நகைக் கடன் எண்	கடன் பெற்ற தேதி	கடன் பெறுபவரின் பெயர் மற்றும் முகவரி	நகைகளின் எடை (கிராம்) (GW)	நகை விவரம்	KDM / NON KDM	கிளை பெயர் மற்றும் முகவரி
1	502112062 043013	13-05-2025	**ரம்யா ஹேமு குமார்,** 31, கண்ணாயிரம் தெரு, ஆவொரி கொல்லை மேடு, சின்ன சேக்காடு, மணலி, சென்னை	86.5	DOLLOR CHAIN -1 NECKLACE - 1	NON KDM	**மணலி கிளை,** எண். 28/97, பாடசாலை தெரு, மணலி, சென்னை, தமிழ்நாடு - 600068.

இடம்: மணலி, நாள்: 16.09.2026
கிளை மேலாளர்

பின் குறிப்பு : 1. ஏலதாரர்கள் தங்கள் PAN விவரங்கள் கட்டாயம் எடுத்து வரவேண்டும். உரிய KYC ஆவணங்கள் அசல் மற்றும் அதன் நகல் உள்ளவர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்
2. ஏல தேதி அன்றே ஏலம் எடுத்தவர்கள் முழு தொகையும் செலுத்த வேண்டும். இல்லாவிடில் ஏலமுன் தொகை திருப்பி தரப்படமாட்டாது.

बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda

ராஜகீழ்ப்பாக்கம் கிளை
மனை எண்.6, வி.ஜி.பி. சீனிவாசா நகர்,மாடம்பாக்கம் பிரதான சாலை,
ராஜகீழ்ப்பாக்கம், சென்னை - 600 073.தொலைபேசி: 044-22282440/ 41
E-mail: RAJAKI@bankofbaroda.bank.in

அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

"APPENDIX- IV-A [See proviso to Rule 6 (2) & 8 (6)]

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் உரிமை அமலாக்கச்சட்டம் 2002 விதி 6(2) & 8 (6) சேர்த்து வாசிக்கவும். இதன் படி அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்களை மின்ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் கடன் கொடுத்த வங்கியானது கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையும் சொத்துக்களை பேங்க் ஆப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் **சுவாதீனத்தில்** எடுத்துக் கொண்டுள்ளதை அடுத்து கீழே குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளபடியே" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் விற்கப்படும் என்பதை இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / கடனீட்டு சொத்துக்கள் / நிலுவை தொகை/ குறைந்த பட்ச விலை / மின் ஏலதேதி மற்றும் நேரம், முன்வைப்பு தொகை மற்றும் ஏல உயர்வு தொகை போன்றவைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ.எண். 1 : கடன்தாரர்கள் /ஜாமீன்தாரர்கள் /அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி :
கடன்தாரர்-1: திரு.S.மயில், S/o. திரு. செங்கேனி, **முகவரி:** எண்.259/226, நியூ காலனி, தியாமலை - 606206, கள்ளக்குறிச்சி தாலுகா, கள்ளக்குறிச்சி மாவட்டம், Pin-606206. **கடன்தாரர்-2: Ms.C. மனோப்ரியா,** S/o.திரு. சின்னப்பையன், **முகவரி:** கதவு எண்.236/058, 5-வது தெரு, நியூ காலனி, தியாமலை, கள்ளக்குறிச்சி தாலுகா, கள்ளக்குறிச்சி மாவட்டம், Pin-606206. **மொத்த நிலுவை தொகை: 07-09-2026 அன்று வரை ரூ.22,93,575.51/-** மேலும் **08-09-2026** முதல் பின்வட்டி மற்றும் பிற சட்ட செலவுகள் உட்பட.

தெரிந்தவரை ஏதேனும் வில்லங்கங்களுடன் கூடிய விரிவான குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துகள்:
சொத்து: செங்கல்பட்டு பதிவு மாவட்டம், திருப்போரூர் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்டதும், காட்டாங்கொளத்தூர் பஞ்சாயத்து யூனியனுக்குட்பட்ட, குமிழி கிராம பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட, குமிழி மதுரா மேட்டுப்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள "ஹில்சைடு ஆரோ நகர்" என்ற மனைப்பிரிவில் (தலைவர் / வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் ந.க.எண்.8 (135)/2019/கு, நாள்: 15.03.2019), சர்வே எண்.196/5, பட்டா எண்.4084-ன்படி, பட்டாவின்படி புதிய சர்வே எண்.196/5C-ன்படியும், மனை எண்.37A-ல் உள்ள, 754 சதுர அடி பரப்பளவு கொண்ட காலி வீட்டு மனை மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு கட்டிடம் மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும், மற்றும் எல்லைகள்: வடக்கில்: மனை எண்.37B, தெற்கில்: மனை எண்.36, கிழக்கில்: மனை எண்.38A, மேற்கில்: 23 அடி சாலை. அளவுகள்: வடக்குப் பகுதியில்: 30 அடி, தெற்குப் பகுதியில்: 30 அடி, கிழக்குப் பகுதியில்: 24 அடி 9 அங்குலம், மேற்குப் பக்கம்: 26 அடி 6 அங்குலம்

குறைந்த பட்ச விலை : ரூ.14,90,000/- | முன் வைப்பு தொகை: ரூ.1,40,900/- | ஏல உயர்வு தொகை: ரூ. 25,000/-

மின் ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம்	12.10.2026 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்	06.10.2026 அன்று பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் விவரங்களை **https://www.bankofbaroda.in/e-auction.htm** மற்றும் ஆன்லைன் போர்ட்டல் **https://baanknet.com** மேலும் விலைப்புள்ளிதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொலைபேசி எண். **044-22282441 / 22282440** - கைபேசி எண். **9940596523**-ல் தொடர்பு கொள்ளவும்.

விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இங்கு ஸ்கேன் செய்யவும்

தேதி : 07.09.2026
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
பேங்க் ஆஃப் பரோடா

யூனியன் பாங்க் ஆப் இந்தியா

சொத்து மீட்பு கிளை

மின் ஏல விற்பனை அறிவிப்பு அசையா சொத்துக்களுக்கானது.

எண்.168, இரண்டாவது தளம், லிங்கி செட்டி தெரு,
பாரிஸ் கார்னர், சென்னை - 600 001, போன்: 91375 54740
மின்னஞ்சல்: ubin0554740@unionbankofindia.bank.in

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (விதி 8 & 9 சேர்த்து வாசிக்கவும்) பாதுகாப்பு நடைமுறை விதிகள் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துகளை இ-ஏலம் மூலம் விற்பனை செய்தல்.

இந்த அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர், **யூனியன் பேங்க் ஆப் இந்தியா,** அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால், அடமானமாக வைக்கப்பட்டு, வங்கியால் **ஆக்கப்பூர்வ சுவாதீனம்** செய்யப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை, வங்கிக்குச் சேர வேண்டிய கடன் பாக்கித்தொகை, வட்டி மற்றும் இதர செலவுகளை வசூலிக்கும் பொருட்டு மின்னணு ஏலத்தில் விடப்படுகிறது. சொத்துக்களானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ளதெல்லாம் உள்ளவாறு"** எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். மேலும் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள், குறைந்தபட்ச கேட்பு விலை மற்றும் டேவணித் தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

கடன்தாரர் & ஜாமீன்தாரர் பெயர்: 1. திரு.M.சபீர் அஹ்மத் த/பெ. திரு.அப்துல் மாலிக், 2. திருமதி.அஸ்மத். க/பெ.திரு.M. சபீர் அஹ்மத், 3. திரு. சாதிக். S த/பெ. திரு. சபீர் அஹ்மத், அனைவரின் குடியிருப்பு முகவரி: எண்.22/96, காந்தி நகர் பிரதான சாலை, விருகம்பாக்கம், சென்னை-600093

நிலுவைத் தொகை: 30.06.2026 அன்றுள்ளபடி ரூ.47,12,311.51 மேலும் எதிர்கால வட்டி, கட்டணங்கள் மற்றும் இதர செலவீனங்கள்.

அசையாச் சொத்தின் விவரங்கள்: அட்டவணை A: திருவள்ளூர் மாவட்டம், முன்னர் சைதாப்பேட்டை வட்டம், தற்போது அம்பத்தூர் வட்டம் வானகரம் கிராமத்தின் சர்வே எண் 145/2 இல் அடங்கிய சென்னை -600095, வானகரம், இரத்னா நகர், முன்னர் கதவு எண்.4/20, தற்போது கதவு எண்.3, மனை எண்.3 இன் பரப்பளவு 2140ச.அடி அல்லது 198.82ச.மீட்டர் விஸ்தீரணங்கொண்ட நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில்: மனை எண்.13; தெற்கில்: 40அடி ஊராட்சி சாலை; கிழக்கில்: மனை எண்.2; மேற்கில்: 24அடி சாலை - இரத்னா நகர் பிரதான சாலை; நாற்புறங்கள்: வடக்குத் தெற்காக கிழக்கு புறம்: 53அடி; வடக்குத் தெற்காக மேற்கு புறம்: 54அடி; கிழக்கு மேற்காக வட புறம்: 40அடி; கிழக்கு மேற்காக தென் புறம்: 40அடி; அனைத்தின் கூட்டுப்பரப்பளவு 2140ச.அடி. **அட்டவணை B:** குறிப்பிடப்பட்ட அட்டவணை A சொத்தில் பிரிக்கப்படாத பங்கு 400ச.அடி நிலம், அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் (பொதுப் பரப்பு உட்பட) தரை தளத்தில் பரப்பளவு 864ச.அடி கட்டிடப் பரப்பு கொண்ட ஃப்ளாட் எண்.G1.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 31,50,000/- | டேவணித் தொகை ₹ 3,15,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 50,000/- | சுவாதீனம் ஆக்கப்பூர்வ

வங்கிக்குத் தெரிந்தவரை மேற்குறிப்பிட்ட சொத்திற்கு வில்லங்கங்கள் ஏதுமில்லை
(இருப்பினும், ஏலதாரர்கள் ஏலத்தை சமர்ப்பிப்பதற்கு முன் வில்லங்க சான்றிதழினை சரிபார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள்)

மின் ஏல தேதி & நேரம் : **13.10.2026** நேரம்: மதியம் 12 மணி முதல் மாலை 5 மணி வரை (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து தரப்படும்) மின் ஏல இணையதளம்: **https://BAANKNET.COM**

விருப்பமுள்ள ஏலதாரர்கள் பதிவு மற்றும் கையேடு பற்றிய **https://BAANKNET.com/** என்ற இணையதளத்தை பார்க்கலாம் மற்றும் ஏதேனும் கேள்விகளுக்கு **8291220220** எண்களிலும் & மின்னஞ்சல்: **support.BAANKNET@psballiance.com,** கேட்டு கொள்ளலாம்,. மேலும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை விவரங்களுக்கு **https://www.unionbankofindia.bank.in/auction-property/view-auction-property.aspx** மற்றும் **www.unionbankofindia.bank.in.** என்ற வலைதளத்தில் காணலாம். ஏலம் தொடர்பான சந்தேகங்களுக்கு **யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, சென்னை- சொத்து மீட்பு கிளை, எண்.168, 2வது தளம், லிங்கி செட்டி தெரு, பாரிஸ் கார்னர், சென்னை-600001, மொபைல்: 9137554740, திருமதி.ஸ்மிதா.K. தொடர்பு எண்: 9900025760 அல்லது ubin0554740@unionbankofindia.bank.in** என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

பிணைய நலன் (அமலாக்க) சட்டம் 2002-இன் விதி 8 & 9 இன் கீழ் நாட்கள் சட்டப்பூர்வமான 15 நாட்கள் விற்பனை அறிவிப்பு.
மேற்குறிப்பிட்ட தேதியில் மின்-ஏல விற்பனை நடைபெறுவது குறித்து, பிணைய நலன் (அமலாக்க) சட்டம் 2002-இன் விதி 8 & 9 இன் கீழ் இந்த அறிவிப்பானது கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் மேற்குறிப்பிட்ட கடன் தொகையினை செலுத்துவதற்கான அறிவிப்பாகவும் கருதப்படும்.

தேதி : 15.09.2026
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
யூனியன் பேங்க் ஆப் இந்தியா

SBI பாரத ஸ்டேட் வங்கி

ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை- II

எண். 44, முதல் தளம்,
எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை,
சென்னை - 600 018.
மின்னஞ்சல் முகவரி: sbi.70674@sbi.co.in

அதிகாரபூர்வ அலுவலர் விவரங்கள்: பெயர்: திரு. கைலாஷ் சந்திர மீனா, போன் : 8699009584

தொடர்புக்கு: நகர வழக்கு அலுவலர் : பெயர்: திரு. ஞானிகுமார் R, மொபைல்: 9150414086

அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு. (8(6) விதியை காண்க)

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6) ஷரத்துகள் படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.

இந்த அறிவிப்பானது பொதுமக்களுக்கு பொதுவாகவும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்)-க்கு அறிவிப்பது யாதெனில்: ஈடு பெற்று கடன் வழங்கியுள்ள வங்கியிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துகள் பாரத ஸ்டேட் வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரி அவர்களால் **மெய்நிலை சுவாதீனத்தில்** எடுத்துக் கொள்ளப்பட்டது. கடன்தாரர்: **திரு. சுபாஷ் சுகுமாறன்** அவர்களிடமிருந்து **பாரத ஸ்டேட் வங்கி, ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை - II க்கு,** செலுத்த வேண்டிய **09.09.2026** அன்றுள்ளபடி கடன் **நிலுவைத் தொகையான ரூ. 1,00,31,125.00/- (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஓர் ஆயிரத்து நூற்று இருபத்து ஐந்து மட்டும்)** மேலும் எதிர்கால வட்டி, இதர, கட்டணங்களை மற்றும் செலவினங்கள் வசூலிப்பதற்காக, **"உள்ளது உள்ளவாறு", "உள்ள இடத்தில் உள்ளவாறு",** மற்றும் **"உள்ளதெல்லாம் உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **08.10.2026** அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி: குடியிருப்பு முகவரி: திரு. சுபாஷ் சுகுமாறன், த/பெ. திரு. சுகுமாரன் சுப்ரமணியன், **முகவரி1:** எண்.19/41, பிரிக்ளின் சாலை, 2வது சந்து, ஓட்டேரி, பெரம்பூர், சென்னை – 600 012. **முகவரி2:** ஃப்ளாட் எண்.S-2, இரண்டாம் தளம், மனை.3H, மதுரா அவின்யூ, கோவூர் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை – 600 128. **முகவரி3: Chennai Serve,** எண்.97, சோமசுந்தரம், முதல் தெரு, அயனாவரம், சென்னை – 600 023.

சொத்துக்களின் விவரங்கள்:

சொத்தின் உரிமையாளர்: திரு. சுபாஷ் சுகுமாறன்த/பெ சுகுமாறன் சுப்ரமணியன் : சொத்தின் அட்டவணை: அட்டவணை - "A": தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் குன்றத்தூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, சென்னை– 600 128, **கோவூர் கிராமத்தின் சர்வே எண்.321/A/7A இல் அடங்கிய** (குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய, ஆணையர் அவர்களால் வழங்கப்பட்ட திட்ட அனுமதி எண்.2338/2012) **மதுரா அவின்யூ,** இல் உள்ள **2400ச.அடி விஸ்தீரணமுள்ள மனை எண்.3H** இன் பாகம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **எல்லைகள்:** வடக்கில் : மனை எண்.2F; தெற்கில் : 24 அடி அகல சாலை; கிழக்கில் : மனை எண்.2H மற்றும் மேற்கில் : மனை எண்.4H. ஆகிய எல்லைகளைக்கொண்ட சொத்தின் **நாற்பரப்புகள்:** கிழக்கு மேற்காக இரு புறமும் 40 அடி மற்றும் வடக்குத் தெற்காக இரு புறமும் 60 அடி, **2400ச.அடி மொத்த விஸ்தீரணம். அட்டவணை - "B" :** (இதன்மூலம் தெரிவிக்கப்பட்ட சொத்து) இங்கு மேற்குறிப்பிட்ட அட்டவணை – "A" இல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ள மொத்தம் 2400ச.அடியில் பிரிக்கப்படாத பங்கு 500ச.அடி காலி நிலம். **அட்டவணை - "C" :** அட்டவணை – "A" இல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட சொத்தில் கட்டப்பட்டுள்ள **இரண்டாம் தளத்தில்** (பொதுப் பரப்பு உட்பட) உள்ள **1220ச.அடி** கட்டிடப் பரப்பு கொண்ட ஃப்ளாட் **"S2"**, (21.01.2021 தேதியிட்ட விற்பனை ஆவண எண்.935/21 & 21.01.2021 தேதியிட்ட கட்டுமான ஆவண எண்.932/21 ஆகியவற்றில் அடங்கியது).

குறைந்தபட்சகேட்புவிலை ₹ 48,00,000/- | டேவணித்தொகை ₹ 4,80,000/- | ஏல உயர்வுத்தொகை ₹ 25,000/-

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதுமில்லை.

சொத்துகளைப் பார்வையிடும் தேதி: **01.10.2026** - நேரம் : பகல் 1 மணி முதல் மாலை 4 மணி வரை

மின் ஏலத் தேதி & நேரம்: **08.10.2026** நேரம்: காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் விற்பனை முடியும் வரை தொடர்ந்து தரப்படும்)

விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://baanknet.com** மற்றும் கடன் வழங்கியவரான பாரத ஸ்டேட் வங்கியின் இணையதளமான **www.sbi.co.in** என்ற இணைப்பில் காணலாம்.

தேதி: 15.09.2026
இடம்: சென்னை

முதன்மை மேலாளர் & அதிகாரப்பூர்வ அலுவலர்,
பாரத ஸ்டேட் வங்கி, SARB-II, சென்னை

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!